بـــــــــــــــسم الله الرّ حمن الرّ حـــــــــيم

**அண்மையில் நடந்த மஜ்லிஸ ுஷ் ஷுரா ஆய்வுகளின்படி நடைமுறையில் உள்ள துஆ புத்தகத்தில் இருந்து அகற்றப்பட வேண்டிய பலயீனமான துஆக்கள் :**

அண்மைக் காலமாக நடைமுறையில் உள்ள எமது இபாதத் விடயங்களில் ஸஹீஹான விடயங்களைக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? என்று ஆய்வு செய்யத் தொடங்கியது முதல் நடைமுறையில் இருந்த பல விடயங்களைப் பலயீனமானதாகக் கண்டு, அவற்றை விட்டும் தவிர்ந்து கொண்டோம். இதேபோன்று கடந்த மாதம் நடந்த மஜ்லிஸுஸ் ஸுராவில் ''முஸ்லிம்களின் அன்றாடப் பிரார்த்தனைகள்'' எனும் புத்தகத்தை ஆய்வுக்குட்படுத்திய போது, அதில் பல விடயங்கள் பலயீனமானதாக தெரியவந்தது. அவை பற்றிய விடயங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அவைகளை நடைமுறைப்படுத்துவதை விட்டும் நாம் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

இருந்தாலும் இவ்வளவு பலயீனமான விடயங்களை ஏன் இவ்வளவு காலமும் நாம் கண்டுகொள்ளவில்லை?; இந்த பலயீனமான விடயங்களை நாம் இவ்வளவு காலமும் செய்தமைக்காகக் குற்றம் பிடிக்கப்படுவோமா? போன்ற சந்தேகங்கள் பலருக்கு எழலாம். எனவே அது சம்பந்தப்பட்ட சிறு விளக்கமொன்றைத் தர விரும்புகின்றோம்.

அல்லாஹ்வால் வானத்திலிருந்து இறக்கப்பட்டதையே நாம் பின்பற்ற வேண்டும். (அல்குர்ஆன் 07 : 03). வானத்திலிருந்து இறக்கப்பட்டதற்கு வஹி என்று கூறப்படும். வஹி என்ற வரையறைக்குள் அல்குர்ஆனும் அல்ஹதீஸும் அடங்கும். வஹியாகிய அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் ஆகியவைகளைப் பாதுகாப்பதாக அல்லாஹ் பொறுப்பேற்றுள்ளான். (அல்குர்ஆன் 15 : 09)

இந்தவகையில் பாதுகாக்கப்பட்ட அல்குர்ஆனில் பலர் கையாடல்கள் செய்ய முற்பட்ட வேளைகளில், அவைகள் இனங்காணப்பட்ட சம்பவங்கள் கடந்த காலங்களில் நடந்துள்ளன. இவ்வாறே ஹதீஸ்களும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இவைகளில் ஹதீஸ்களை அறிவிக்கும் அறிவிப்பாளர் தொடரில் நபியவர்கள் வரைக்கும் சென்றடைந்தமைக்கான சரியான சான்றுகள் காணப்படுகின்றனவா என ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இதற்காக வேண்டித்தான் ஹதீஸின் நம்பகத் தன்மையை அறிந்து கொள்வதற்காக வேண்டி, ''உஸூலுல் ஹதீஸ்'' எனும் சில விதிமுறைகளை விதித்துள்ளனர். இந்த விதிமுறைகளை உலகில் உள்ள அனைவரும் ஏற்று, அறபு மத்ரஸாக்களில் ஒரு பாடமாகவும் படிப்பித்துக் கொடுக்கின்றனர். இந்த விதிமுறைகள் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டவை என்பதால், இதில் தவறுகள் ஏற்படுவதற்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன. இந்தத் தவறுகள் கடந்த ஓரிரு வருடங்களுக்கு முன்புதான் எங்களால் உணர்ந்து கொள்ள முடிந்தது. இதற்கு முன்னர் உலகில் இந்தத் தவறுகளை யாரும் சுட்டிக் காட்டியதாகவும் நாம் அறியவில்லை. எங்களை அறியாமல் நடந்தத் தவறுகளுக்காக அல்லாஹ் எங்களைக் குற்றம் பிடிக்கப் போவதுமில்லை; அதனால் நாங்கள் வழிகெட்டுப் போவதுமில்லை. (பார்க்க - அல்குர்ஆன் - 2:216, 9:115)

இந்த வகையில் ''உஸூலுல் ஹதீஸ்'' எனும் இந்த விதிமுறையில் காணப்பட்ட தவறுகளில் ஓரிரு விடயங்களைக் கவனிப்போம்.

ஒரு ஹதீஸ் இது ஸஹீஹானதா எனத் தீர்மானிப்பதற்கு சில விதிமுறைகளை வைத்துள்ளார்கள். இதனை யாரும் இதுவரை மறுத்ததில்லை. இதேபோன்று லயீபான ஹதீஸை தீர்மானிப்பதற்கும் சில விதிமுறைகளை வைத்துள்ளார்கள் இதனையும் யாரும் மறுப்பதற்கில்லை. காரணம் அறிவிப்பாளர் தொடர்களில் வரக்கூடிய சில குறைகளால் இது நபிவரைக்கும் சென்றடைந்ததா என்பதில் ஐயப்பாடு காணப்படுகின்றது. எனவே சந்தேகமான ஒன்றை, 'இது வஹியாக இருக்கலாம்' என்று உறுதியாகக் கூற முடியாது. உறுதியற்ற ஒன்றை

நாம் பின்பற்றவும் முடியாது. இதனைப் பின்பற்றாவிட்டால் அல்லாஹ் குற்றமாகப் பிடிக்கவுமாட்டான்.

இதேபோன்றுதான் மனித கருத்துக்களையும் செயற்பாடுகளையும் நாம் பின்பற்ற முடியாது. இதேபோன்று நபியவர்களைத் தொட்டும் வராத ஸஹாபாக்களின் சொல், செயல், அங்கீகாரங்களாக வரலாறுகளில் காணப்படக் கூடியவைகள் வஹிதான் என்று யாராலும் கூறவும் முடியாது. இதனை மவ்கூப் என்று கூறுவார்கள். எனவே நபி ﷺ அவர்கள் வரைக்கும் சென்றடையாத எந்த அறிவிப்புக்களையும் நாம் பின்பற்ற முடியாது.

இவ்வாறே பலயீனமான ஹதீஸ்களையும் நாம் பின்பற்ற முடியாது. ஏனெனில் அதில் நபி ﷺ அவர்கள் வரைக்கும் சென்றடைந்தமைக்கான சான்றுகள் முறையாகக் காணப்படாததேயாகும்.

எனவே உஸூலுல் ஹதீஸில் காணப்படக் கூடிய தவறுகளில் நாம் தற்போது தவிர்ந்து கொண்ட விடயம் யாதெனில்,

01. “ஒரே விடயத்தைக் கூறக்கூடிய இரண்டு பலயீனமான ஹதீஸ்கள் காணப்பட்டால், இரண்டையும் ஒன்று சேர்த்து, அதனை ஹஸன் தரத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் அதனைப் பின்பற்றலாம்” என்பதும்
02. ஒரு மவ்கூபான செய்தியையும் ஒரு பலயீனமான அறிவிப்பையும் ஒன்று சேர்த்து, அதனை ஹஸன் தரத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் அதனைப் பின்பற்றலாம்” என்பதுமாகும்.

எனவே இங்கு புரிந்து கொள்ள வேண்டிய விடயம் யாதெனில், இரண்டு பிழையான தகவல்கள் ஒன்று சேர்வதன் மூலம் எவ்வகையிலும் அச்செய்தி உறுதியானது என்ற முடிவுக்கு வரமுடியாது. இது வஹியாக இருக்கலாம் என்ற ஊகத்தில் பின்பற்றி, மார்க்கத்தில் இல்லாத ஒன்றைச் செய்து, பித்அத் செய்தவர்களாக ஆகிவிடக் கூடாது. வழிகேட்டில் உள்ளவர்களே ஊகத்தைப் பின்பற்றுவதாக அல்லாஹுத்தஆலா அல்குர்ஆனிலே 6:112வது வசனத்திலே குறிப்பிடுகின்றான்.

எனவே உஸூலுல் ஹதீஸில் உள்ள இந்த பிழையான விடயங்களை இதுவரை யாரும் சுட்டிக் காட்டாததாலும், எமது அறிவுக்கு இவை புலப்படாததாலும், ஹஸன் தரத்தில் அமைந்த ஹதீஸ்கள் என்று நாஸிருத்தீன் அல்பானி போன்ற ஹதீஸ்களை அறிஞர்கள் குறிப்பிடுவதாலும் நாம் இவ்வளவு காலமும் பின்பற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அறியாமல் நடந்த இத்தவறுகளை அல்லாஹ் மன்னிக்கப் போதுமானவன். இதுபோன்ற தவறுகள் இனிமேலும் ஏற்படாமலிருக்கவும், இந்த விடயங்களில் மிகவும் கண்ணுங் கருத்துமாக இருக்கவும் அல்லாஹுத்தஆலா பேரருள் புரிவானாக!

குறிப்பு : நாம் பலயீனமானவை என்று முடிவெடுத்த விடயங்களில் சிலதை இதற்கு முன்னர் பலயீனமானது என்று ஓரிருவர் வெறுமனே கூறினார்களே தவிர, காரணத்தைக் கூறவில்லை. அவர்களில் ஒருவருக்கு இந்த ஹதீஸ் ‘ஹஸனானது’ என்று நாம் பதிலளித்தபோது, அவர் மறுப்பெதுவும் கூறவில்லை. காரணம் அவரும் இந்த உஸூலுல் ஹதீஸ் அடிப்படையை ஏற்றுக் கொண்டவராவார். மேலும் அவர்கள் பலயீனமானது என்று கூறிய பல ஹதீஸ்களை நாம் மீளாய்வு செய்தபோது, அவைகள் ஸஹீஹானவைகள் என்று நாம் உறுதி செய்துள்ளோம்.

தொடர்ந்தும் எமது ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நடைமுறையில் உள்ள நமது இபாதத்களில் ஏதாவது பலயீனமானவை என இனங்காணப்பட்டால், இன்ஷா அல்லாஹ் பிரசுரம் மூலம் அல்லது ஒலிவடிவில் பொதுமக்களுக்களுக்குத் தெரியப்படுத்தப்படும்.

# இதற்கு முன்னர் நடந்த மஜ்லிஸுஷ் ஷூரா ஆய்வுகளில் பலயீனமானவை என ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட துஆக்கள் :

01. ம.்.ரிபுடைய அதான் கேட்டால் ஓதும் துஆ : துஆ புத்தக பக்கம் :22

اللَّهُمَّ إِنَّ هَذَا إِقْبَالُ لَيْلِكَ، وَإِدْبَارُ نَهَارِكَ، وَأَصْوَاتُ دُعَاتِكَ، فَاغْفِرْ لِي (سنن أبي داود - 530)

இது பலயீனமானதாகும்.

02. அல்குர்ஆன் ஓத ஆரம்பிக்கும் போது :

أَعُوذُ بِاللَّهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ مِنْ هَمْزِهِ، وَنَفْخِهِ، وَنَفْثِهِ

என்று ஓதுவதற்கு பதிலாக أَعُوذُ بِاللَّهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ என்று ஓத வேண்டும்.

(ஸஹீஹுல் புகாரி:6115, அபூதாவுத்:4781, ஸஹீஹ் முஸ்லிம்: (2610)110, ஹாகிம் : 3649)

03. உழ்ஹிய்யா பிராணியை அறுக்கும்போது : துஆ புத்தக பக்கம் : 76

**“இன்னீ வஜ்ஜஹ்து ............................ ”** (அஹ்மத் : 15022) என்று வரக் கூடிய செய்தி பலயீனமானதாகும்.

இதற்குப் பகரமாக இரண்டு முறைகளில் உழ்ஹிய்யாப் பிராணியை அறுக்கலாம் என்பது ஸஹீஹான அறிவிப்புக்களில் காணப்படுகின்றது,

முதலாவது முறை : بِاسْمِ اللهِ، واللهُ أَكْبَرُ என்று மட்டும் கூறி அறுப்பதாகும்.

(ஸஹீஹுல் புகாரி : 5565 ஸஹீஹ் முஸ்லிம் : 1966 )

இரண்டாவது முறை : بِاسْمِ اللهِ، اللهُمَّ تَقَبَّلْ مِنْ مُحَمَّدٍ என்று கூறி, முஹம்மது என்று வருகின்ற இடங்களில் தன்னுடைய பெயரைக் கூறி அறுக்க முடியும். (ஸஹீஹ் முஸ்லிம் : 1966)

ஆகவே இந்த இரண்டு முறைகளில் ஏதாவதொரு முறையிலே உழ்ஹிய்யாப் பிராணியை அறுத்துக் கொள்ளலாம். இது சம்பந்தமாக விரிவான விளக்கம் பிரசுரமாக வெளியிடப்பட்டது. அதனைப் பார்த்துக் கொள்ளவும்.

04. ஸஜ்தாவுடைய வசனங்கள் ஓதினால் : துஆ புத்தக 81ம் பக்கம்

سَجَدَ وَجْهِي لِلَّذِي خَلَقَهُ..........

ஸஜ்தாவுடைய வசனங்கள் ஓதும்போது அதற்காக ஓதுவதெற்கென்று ஒன்றும் இல்லை. மேலேயுள்ள துஆ இதற்குரியதல்ல. இது சம்பந்தமாக ஸஹீஹ் முஸ்லிமில் (771) - 201ம் இலக்கத்தில் வரக்கூடிய ..........سَجَدَ وَجْهِي لِلَّذِي خَلَقَهُ என்ற துஆ பொதுவாக தொழுகையில் ஸுஜூதில் ஓதக் கூடியதாகும்.

**அண்மையில் நடந்த மஜ்லிஸூஷ் ஷூரா ஆய்வுகளில் பலயீனமானவை என தீர்மானிக் கப்பட்ட துஆக்கள் :**

05. திடுக்கிட்டு விழித்தால் : துஆ புத்தக பக்கம் : 139

أَعُوذُ بِكَلِمَاتِ اللَّهِ التَّامَّةِ، مِنْ غَضَبِهِ وَشَرِّ عِبَادِهِ، وَمِنْ هَمَزَاتِ الشَّيَاطِينِ وَأَنْ يَحْضُرُونِ – (سنن أبي داود : 3893)

இது பலயீனமான அறிவிப்பாகும். இதில் முஹம்மது இப்னு இஸ்ஹாக் இப்னு யஸார் அல்மத்லபி என்ற அறிவிப்பாளர் காணப்படுகின்றார். இவர் 4ம் தரத்தில் உள்ள முதல்லிஸ் ஆவார்.

06. கனவு கண்டு பயந்ததால் : துஆ புத்தக பக்கம் : 144

மேலேயுள்ள துஆவே இதிலும் இடம்பெற்றுள்ளது. எனவே இதனை ஓதுவதையும் நாம் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

07. வீட்டினுள் நுழையும்போது : துஆ புத்தக பக்கம் : 149

اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ خَيْرَ الْمَوْلَجِ، وَخَيْرَ الْمَخْرَجِ، بِسْمِ اللَّهِ وَلَجْنَا، وَبِسْمِ اللَّهِ خَرَجْنَا، وَعَلَى اللَّهِ رَبِّنَا تَوَكَّلْنَا

(سنن أبي داود : 5096)

இது பலயீனமானதாகும். இதில் முஹம்மது இப்னு இஸ்மாயீல் அய்யாஸ் (ஸலீம் அல் அன்ஸி அல் ஹின்ஸி) என்ற அறிவிப்பாளர் இடம்பெறுகின்றார். இவர் தன் தந்தை அறிவித்ததாகக் கூறுகின்றார். ஆனால் இவர் தன் தந்தையிடமிருந்து எதனையும் செவிமடுக்கவில்லை.

08. கடைத்தெருக்களுக்குச் சென்றால் : துஆ புத்தக பக்கம் : 153

لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، لَهُ المُلْكُ وَلَهُ الحَمْدُ يُحْيِي وَيُمِيتُ، وَهُوَ حَيٌّ لَا يَمُوتُ، بِيَدِهِ الخَيْرُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

(திர்மிதி : 3428, இப்னுமாஜா : 2435)

இதில் அம்ரிப்னு தீனார் இடம்பெறுகின்றார். இவர்பலயீனமானவராவார். அதேபோன்று அஸ்ஹர் இப்னு ஸினான் இவர் மிகவும் பலயீனமானவராவார். இந்த ஹதீஸ் நிராகரிக்கப்பட வேண்டியது என்று புகாரி குறிப்பிடுகின்றார்.

09. பிறை கண்டால் : துஆ புத்தக பக்கம் : 156

اللهُمَّ أَهِلَّهُ عَلَيْنَا بِالْيُمْنِ وَالْإِيمَانِ، وَالسَّلَامَةِ وَالْإِسْلَامِ، رَبِّي وَرَبُّكَ اللهُ

(திர்மிதி : 3451, அஹ்மத் : 1397)

இதில் சுலைமான் இப்னு சுப்யான் அல்மதனி இடம்பெறுகின்றார். இவர்பலயீனமானவராவார்.

10. கடன் சுமை நீங்கிட : துஆ புத்தக பக்கம் : 159

اللهُمَّ اكْفِنِي بِحَلالِكَ عَنْ حَرَامِكَ، وَأَغْنِنِي بِفَضْلِكَ عَمَّنْ سِوَاكَ

(அஹ்மத் : 1319)

இதில் அப்துர் ரஹ்மான் இப்னு இஸ்ஹாக் இடம்பெறுகின்றார். இவர்பலயீனமானவராவார்.

11. விளை நிலங்களில் அபிவிருத்தி ஏற்பட :

اللهُمَّ ضَعْ فِي أَرْضِنَا بَرَكَتَهَا وَزِينَتَهَا وَسَكَنَهَا

(மு.:.ஜமுல் கபீர் லித்தபரானி : 6928)

இதில் ஸயீத் இப்னு பஷீர் இடம்பெறுகின்றார். இவர் பலயீனமானவராவார். மேலும் மதர் இப்னு வர்ராக், சுவைத் இப்னு ஹாதம் போன்றோரும் இடம் பெறுகின்றனர்.

12. பிரார்த்தனைகள் ஆரம்பிக்கும்போது : துஆ புத்தக பக்கம் : 167

سُبْحَانَ رَبِّيَ الْأَعْلَى الْعَلِيِّ الْوَهَّابِ

(அஹ்மத் : 16548)

இதில் உமர் இப்னு ராஷித் அல்யமாமி இடம்பெறுகின்றார். இவர் பலயீனமானவராவார்.

மேலும் 169ம் பக்க அடிக்குறிப்பில் பிரார்த்தனைக்கு முன் ஸலவாத்துக் கூற வேண்டும் என்று காணப்படுகின்றது. இது பிழையான தகவலாகும். தொழுகையின் அத்தஹிய்யாத்தில் இறுதியில் வரும் பிரார்த்தனைக்கு முன்னர் ஸலவாத்துக் கூறுவதனையே **திர்மிதி : 3476, 3477, நஸாஈ : 1284ம்** இலக்க ஹதீஸ்கள் தெளிவுபடுத்துகின்றன. மாறாக தொழுகையல்லாத நேரத்தில் பிரார்த்தனைக்கு முன்னர் ஸலவாத்துக் கூறுவதற்கு ஆதாரமில்லை.

13. சோதனைக்கு உள்ளானவரைக் கண்டால் : துஆ புத்தக பக்கம் : 172

الْحَمْدُ لِلَّهِ الَّذِي عَافَانِي مِمَّا ابْتَلَاكَ بِهِ وَفَضَّلَنِي عَلَى كَثِيرٍ مِمَّنْ خَلَقَهُ تَفْضِيلًا

(திர்மிதி : 3431, 3432, இப்னுமாஜா : 3892)

இதில் ஹாரிஜா இப்னு முஸ்அப், அம்ர் இப்னு தீனார், அப்துல்லாஹ் இப்னுஉமர் அல் உமரி ஆகியோர் இடம்பெறுகின்றனர். இவர்கள் பலயீனமானவர்களாவர்.

14. ஜனாஸா தொழுகையில் 3வது தக்பீரில் : துஆ புத்தக பக்கம் : 192

اللَّهُمَّ اغْفِرْ لِحَيِّنَا، وَمَيِّتِنَا، وَصَغِيرِنَا، وَكَبِيرِنَا، وَذَكَرِنَا وَأُنْثَانَا، وَشَاهِدِنَا وَغَائِبِنَا، اللَّهُمَّ مَنْ أَحْيَيْتَهُ مِنَّا فَأَحْيِهِ عَلَى الْإِيمَانِ، وَمَنْ تَوَفَّيْتَهُ مِنَّا فَتَوَفَّهُ عَلَى الْإِسْلَامِ، اللَّهُمَّ لَا تَحْرِمْنَا أَجْرَهُ، وَلَا تُضِلَّنَا بَعْدَهُ

(அபூதாவுத் : 3201 திர்மிதி : 1024, இப்னுமாஜா : 1498, அஹ்மத் : 2809)

அபூதாவுதில் வரக்கூடிய அறிவிப்பில் மூஸா இப்னு மர்வான் அர்ரகீ என்பவர் இடம்பெறுகின்றார். இவரை இமாம் தஹபி “ஸதூக்” என்கின்றார். இதேபோன்று இப்னு ஹஜர் இவரை “மக்பூல்” என்கின்றார். எனவே இந்த அறிவிப்பை எடுக்கலாம். இருந்தாலும் وَذَكَرِنَا وَأُنْثَانَا என்பது வரைக்கும்தான் ஆதாரம் காணப்படுகின்றது. இதற்குப் பின்னால் வருபவைகள் “முர்ஸலா?” அல்லது “மவ்சூலா?” என்பதில் சர்ச்சைகள் காணப்படுகின்றன. எனவே இவைகளை எடுக்க முடியாது.

15. குழந்தைகளுக்கான ஜனாஸா தொழுகையில் 3வது தக்பீரில் : துஆ புத்தக பக்கம் :188

اَللّٰهُمَّ اغْفِرْ لِوَالِدَيْهِ وَعَافِيْهِمَا

இது மவ்கூப் ஆகும். இதனைப் பின்பற்ற முடியாது. (முதலாவது துஆ சரியானது)

16. பால் குடித்த பின் : துஆ புத்தக பக்கம் : 203

اللَّهُمَّ بَارِكْ لَنَا فِيهِ، وَزِدْنَا مِنْهُ،

(அபூதாவுத் : 3730, 3794, இப்னுமாஜா : 3322)

பால் என்பதை குறித்து வரக் கூடிய செய்தி பலயீனமானதாகும். இதில் வரக்கூடிய அலி இப்னு ஸைத் பலயீனமானவராவார். மேலும் உமர் இப்னு ஹர்மலா என்பவர் ''மஜ்ஹூல்'' – அறியப்படாதவராவார்.

17. புத்தாடை அணியும்போது : துஆ புத்தக பக்கம் : 204

اللَّهُمَّ لَكَ الْحَمْدُ أَنْتَ كَسَوْتَنِيهِ أَسْأَلُكَ مِنْ خَيْرِهِ وَخَيْرِ مَا صُنِعَ لَهُ، وَأَعُوذُ بِكَ مِنْ شَرِّهِ، وَشَرِّ مَا صُنِعَ لَهُ

(அபூதாவுத் : 4020)

இந்த அறிவிப்பில் அல் ஜுரைரீ என்பவருக்குப் பின்னால் வரக் கூடிய ஹம்மாத் என்பவர் அறியப்படாதவராவார். மேலும் இதில் إِخْتِلَاط காணப்படுகின்றது. ஆனாலும் ஜுரைரீயிடமிருந்து ஹாலித் அறிவிக்கக் கூடிய செய்திகளை இமாம் புகாரி, இமாம் முஸ்லிம் ஆகியோர் எடுத்துள்ளனர்.

இருந்தாலும் இப்னு ஹிப்பானில் 5420ம் இலக்கத்தில் வரக்கூடிய பின்வரும் ஸஹீஹான துஆவை இதற்குப் பகரமாக மாற்றிக் கொள்வோம்.

اللهم أنت كسوتني من هَذَا الْقَمِيصَ أَوِ الرِّدَاءَ أَوِ الْعِمَامَةَ, أَسْأَلُكَ خيره وخير ما صنع له, وأعوذ بك من شره وشر ما صنع له

18. பிறர் புத்தாடை அணியக் கண்டால் : துஆ புத்தக பக்கம் : 205

الْبَسْ جَدِيدًا، وَعِشْ حَمِيدًا، وَمُتْ شَهِيدًا، وَيَرْزُقُكَ اللهُ قُرَّةَ عَيْنٍ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ

(இப்னுமாஜா : 3558, அஹ்மது : 5619, 5620)

இந்த அறிவிப்பைப் பற்றி நிறைய விமர்சனங்கள் காணப்படுவதாலும், புதிய ஆடை அணியும்போதா? அல்லது பழைய ஆடை அணியும்போதா? இதனை ஓதவேண்டும் என்ற சர்ச்சைக் காணப்படுவதாலும் இதனை எடுக்க முடியாது.

19. இடி இடிக்கும்போது : துஆ புத்தக பக்கம் : 223

اللهُمَّ لَا تَقْتُلْنَا بِغَضَبِكَ، وَلَا تُهْلِكْنَا بِعَذَابِكَ، وَعَافِنَا قَبْلَ ذَلِكَ

(அஹ்மது : 5763)

இந்த அறிவிப்பாளர் தொடரில் வரக் கூடிய ஹஜ்ஜாஜ் இப்னு அர்தாத் என்பவர் பலயீனமானவராவார். இதேபோன்று அபூமதர் என்பவர் அறியப்படாதவராவார். எனவே இது பலயீனமான அறிவிப்பாகும்.

20. மழை தேடிப் பிரார்த்தித்தல் : துஆ புத்தக பக்கம் : 226

اللَّهُمَّ اسْقِ عِبَادَكَ، وَبَهَائِمَكَ، وَانْشُرْ رَحْمَتَكَ، وَأَحْيِ بَلَدَكَ الْمَيِّتَ

(அஹ்மது : 5763)

இந்த அறிவிப்பு முர்ஸலானது என்றும் மர்பூ.:.வானது என்றும் நிறைய கருத்துமுரண்பாடுகள் காணப்படுகின்றன. இருந்தாலும் முர்ஸல் என்று கூறக் கூடிய கூற்றுக்களே பலமானதாக உள்ளன. அலீ இப்னு ஹாதிம் என்பவர் மட்டுமே மர்பூ.:. என்று கூறியுள்ளார். இவர் ஸதூக் என்று சூறப்பட்டாலும் இவரைப் பற்றி குறைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

21. எந்த ஊரை நோக்கிச் செல்கிறோமோ அந்த ஊரைக் கண்டதும் : பக்கம் : 233

اللَّهُمَّ بَارِكْ لَنَا فِيهَا ثَلَاثَ مَرَّاتٍ اللَّهُمَّ ارْزُقْنَا جَنَاهَا، وَجَنِّبْنَا وَبَاهَا، وَحَبِّبْنَا إِلَى أَهْلِهَا، وَحَبِّبْ صَالِحَ أَهْلِهَا إِلَيْنَا

(தாரானி : 836) இந்த அறிவிப்பு பலயீனமானதாகும்.

22. பிரயாணியை வழியனுப்புவதற்கு : துஆ புத்தக பக்கம் : 242

أَسْتَوْدِعُ اللَّهَ دِينَكَ وَأَمَانَتَكَ وَخَوَاتِيمَ عَمَلِكَ

(அபூதாவுத் 2600, அஹ்மத் : 4524)

இந்த அறிவிப்பு பலயீனமானதாகும். இருந்தாலும் பிரயாணியை வழியனுப்புவதற்கு இதற்கு அடுத்ததாக உள்ள 243ம் பக்கத்தில் உள்ள பின்வரும் துஆவை அவர் புறப்பட்டுச் செல்லும்போது அவருக்காக ஓதிக் கொள்ளலாம். பிரயாணியின் கையைப் பிடித்துத்தான் இதனை ஓத வேண்டும் என்ற அவசியம் இல்லை.

اللَّهُمَّ اطْوِ لَهُ الْبَعِيْدَ، وَهَوِّنْ عَلَيْهِ السَّفَرَ

(அஹ்மத் : 8385)

23. வழியனுப்புபவருக்காக பிரயாணி ஓதவேண்டியது : துஆ புத்தக பக்கம் : 247

أَسْتَوْدِعُكُمُ اللَّهَ الَّذِي لَا تَضِيعُ وَدَائِعُهُ

(இப்னுமாஜா : 2825, அஹ்மத் : 9230)

இந்த அறிவிப்பாளர் தொடரில் வரக் கூடிய இப்னு லஹீஆ, மற்றும் ரிஸ்தீன் என்பவர்கள் பலயீனமானவர்களாவர். எனவே இது பலயீனமான ஹதீஸாகும்.

24. உடல் நலம் பற்றி விசாரித்தால் பதிலாக : துஆ புத்தக பக்கம் : 255

أحمدُ الله إليكَ يا............

அல்அஹாதீதுஸ் ஸஹீஹா : 2952, அஹ்மத் : 9230)

நபியைத் தொட்டும் வரக்கூடிய ஹதீஸ்கள் பலயீனமானதாகும். உமர் ﷺ அவர்களைத் தொட்டும் வரக்கூடிய செய்தி ஸஹீஹானதாக இருந்தாலும் இது மவ்கூபாகும். இந்த மவ்கூபான செய்தியை வைத்து நபியைத் தொட்டு வரக் கூடியதை வலுப்படுத்துகிறார்கள். இதனைப் பின்பற்ற முடியாது.

25. இணைவைப்பிலிருந்து பாதுகாப்புப் பெற : துஆ புத்தக பக்கம் : 257

اللَّهُمَّ إِنَّا نَعُوذُ بِكَ مِنْ أَنْ نُشْرِكَ بِكَ شَيْئًا نَعْلَمُهُ، وَنَسْتَغْفِرُكَ لِمَا لَا نَعْلَمُ

(அஹ்மத் : 19606)

இந்த அறிவிப்பாளர் தொடரில் வரக் கூடிய அபூ அலி அல்காஹிலி என்பவர் அறியப்படாதவராவார். எனவே இது பலயீனமான அறிவிப்பாகும்.

26. நோன்பு திறக்கும்போது ஓதும் துஆ : துஆ புத்தக பக்கம் : 66

ذَهَبَ الظَّمَأُ وَابْتَلَّتِ الْعُرُوقُ، وَثَبَتَ الْأَجْرُ إِنْ شَاءَ اللَّهُ

(அபூதவுத் : 2357)

இந்த அறிவிப்பு பலயீனமானதாகும்.

27. பக்கம் 264ல் உள்ள 4ம் இலக்கம் கொண்ட துஆ :

اللَّهُمَّ جَنِّبْنِي مُنْكَرَاتِ الْأَخْلَاقِ، وَالْأَهْوَاءِ، وَالْأَدْوَاءِ

இது பலயீனமானதாகும். இதற்குப் பதிலாக பின்வரும் துஆவை ஓதிக் கொள்ளவும்.

اللَّهُمَّ جَنِّبْنِي مُنْكَرَاتِ الْأَخْلَاقِ، وَالْأَهْوَاءِ، وَالْأَسْوَاءِ، وَالْأَدْوَاءِ

(இப்னு ஹிப்பான் : 960 )

**மேலேயுள்ள துஆக்கள் எமது துஆப்புத்தகத்தில் உள்ள நாம் தவிர்ந்து கொள்ள வேண்டிய துஆக்களாகும். இவைகளை தவிர்த்து புதிய துஆப்புத்தகம் வெகுவிரைவில் வெளியிடப்படும் இன்ஷா அல்லாஹ்.**

**<u>அண்மையில் எடுக்கப்பட்ட மஜ்லிஸ ுஷ் ஷுரா ஆய்வு முடிவுகளில் துஆ புத்தகம் சம்பந்தப்படாத ஏனைய விடயங்கள்:</u>** **<u>இவைகளின் விரிவான ஆய்வுக் கட்டுரை இன்ஷா அல்லாஹ் மிக விரைவில் வெளியிடப்படும்.</u>**

28. வலீமா 3 நாட்களுக்குள் கொடுக்க வேண்டும் என்பதில்லை.
29. ஸுஜுதுக்கு செல்லும்போது கையை முற்படுத்துவதா? அல்லது முழங்காலை முற்படுத்துவதா? இதில் கையையே முற்படுத்த வேண்டும்.
30. அல்குர்ஆனில் மொத்தம் 15 ஸஜதாவுடைய வசனங்கள் இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் 4 இடங்களுக்கு மட்டுமே ஸஜதா திலாவத் செய்ததாக ஆதாரம் காணப்படுகிறது. இருந்தாலும் **தொழுகையில்** ஸுரத்துல் இன்ஸிகாக் ஓதும்போது மாத்திரமே ஸஜதா திலாவத் செய்யலாம்.
31. வுழூச் செய்யும்போது அபத்திற்கு நீர் தெளித்தல் கூடாது. இதில் மதி வெளியாகக் கூடியவருக்கான சட்டம் அடங்கியுள்ளது. இது சம்பந்தமான விரிவான ஆய்வுக் கட்டுரை இன்ஷா அல்லாஹ் விரைவில் வெளியிடப்படும்.
32. தொழுகைக்கு வுழூச் செய்யும்போது மூன்று விதமாக வுழூச் செய்யலாம். இருந்தாலும் நபி அவர்கள் பெரும்பாலும் தொழுகைக்கு மும்மூன்று முறை கழுவும் முறையிலேயே வுழூச் செய்துள்ளார்கள்.
    அ) ஒவ்வொரு உறுப்புக்களையும் ஒவ்வொரு முறை கழுவுதல்.
    ஆ. ஒவ்வொரு உறுப்புக்களையும் இவ்விரண்டு முறை கழுவுதல்.
    இ. ஒவ்வொரு உறுப்புக்களையும் மும்மூன்று முறை கழுவுதல்.
    குறிப்பு : இம்மூன்று முறைகளிலும் தலையையும் காதையும் ஒரு முறையே மஸஹ் செய்ய வேண்டும்.
33. அத்தஹிய்யாத்தில் ....اَحْسَنَ الْكَلَامِ كَلَامُ اللهِ ஓதுவதற்கு ஆதாரம் இருக்கின்றது.
    **நபி ﷺ அவர்கள் தொழுகையில் அத்தஹிய்யாத்திற்குப் பிறகு** أَحْسَنُ الْكَلَامِ كَلَامُ اللهِ، وَأَحْسَنُ الْهَدْيِ هَدْيُ مُحَمَّدٍﷺ **என்று ஓதக் கூடியவர்களாக இருந்தார்கள்.** (நஸாஈ : 1311)
34. நடு இருப்பில் விரல் அசைப்பதற்கு ஆதாரம் இருக்கின்றது. (அஹ்மது : 18858)
    வாயில் இப்னு ஹுஜ்ர் என்ற நபித்தோழர் நபியவர்களின் தொழுகையை விபரிக்கின்றார்கள். அதில் முதலாவது ரக்அத்தில் எவ்வாறு தக்பீர் கட்டினார்கள்; பிறகு எவ்வாறு ருகூஃ செய்தார்கள்; பிறகு எவ்வாறு நிலைக்கு வந்தார்கள் ; பிறகு எவ்வாறு ஸுஜுது செய்தார்கள் ; அதில் கைகளை எவ்வாறு வைத்தார்கள் ; பிறகு நடு இருப்பிற்கு வந்தார்கள் ; அதில் எவ்வாறு இடது காலை வைத்தார்கள் ; அதில் இடது கையை எவ்வாறு வைத்தார்கள் ; பிறகு வலது கையை எவ்வாறு வைத்தார்கள் என்பதனைக் குறிப்பிடும்போது விரல்களை எவ்வாறு வைத்தார்கள் என்று விபரிக்கின்றார்கள். அதில் ஆள்காட்டி (சுட்டு) விரலால் அசைத்தார்கள் என்று குறிப்பிட்டு விட்டு, **பிறகு மீண்டும் ஸஜதா செய்தார்கள்** என்று குறிப்பிடுகின்றார்கள்.
    இது மாத்திரமன்றி நடு இருப்பில் வலது கையை எவ்வாறு வைக்க வேண்டும் என்பதற்கு இது தவிர்ந்த வேறு வடிவங்கள் எதுவும் காணப்படவில்லை. இது சம்பந்தமான விரிவான ஆய்வுக் கட்டுரை இன்ஷா அல்லாஹ் விரைவில் வெளியிடப்படும்.
35. ஸுஜுதில் இரு குதிகால்களையும் சேர்ப்பதற்கு ஆதாரம் இருக்கின்றது. (இப்னுகுஸைமா : 654) இந்த ஹதீஸையும் சிலர் 'ஸாத்' என்கின்றனர். இது 'ஸாத்' அல்ல என்பது சம்பந்தமாகவும் விரிவான ஆய்வுக் கட்டுரை இன்ஷா அல்லாஹ் விரைவில் வெளியிடப்படும்.

36.

**வெளியீடு :** **தலைமையகம்,**
**ஜமாஅதுல் முஸ்லிமீன்**
**கல்பிட்டி வீதி, ஏத்தாளை.**
**புத்தளம், இலங்கை.** website : www. jamaathulmuslimeen.com